**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.(தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093667

1. District : மாவட்டம் திருப்பூர் PS: காவல்நிலையம் ஊ.த.க Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 4/2020/AC/TPR Date: நாள் 17-10-2020
2. (i) Act சட்டம்: Cr.P.C Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: P.C (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 16-10-2020 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.50 Time to : நேரம் வரை 20.30
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17-10-2020 Time : நேரம் 11.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-III 17-10-2020 Time : நேரம் 11.30 hrs
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தட்டச்சு செய்யப்பட்ட புகார்
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 12 கி.மீ வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், அவினாசி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. இரத்தினம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சாமிநாதன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20-5-66 (d) Nationality : நாட்டினம் இந்திய (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் [illegible] (g) Address : மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. சுந்தரமூர்த்தி, தற்காலிக இணை சார்பதிவாளர், அவினாசி

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவைப்படின் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவைப்படின் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டவருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

17-10-2020 at 14.45hrs

Name: பெயர் சி. நட.சிவமூர்த்தி
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் நிலை ஆய்வாளர்

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 4/2020/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 17.10.2020-ம் தேதி காலை 11.30 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.எஸ்.இரத்தினம் அவர்கள் அலுவலகம் ஆஜராகி ஒரு டைப் செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அதன் விபரம் வருமாறு. அனுப்புனர் திரு.S..இரத்தினம், கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுனர்.காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.எண்.523/2020/ஐ1 நாள்.17.10.2020 ஐயா, பொருள்: திடீர் தணிக்கை – அவினாசி சார்பதிவாளர் அலுவலகம் - புகார் மனு – வழங்குதல் - தொடர்பாக. நேற்று 16.10.2020 ஆம் தேதி மதியம் திருப்பூர் மாவட்டம் அவினாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பத்திரம் பதிவு செய்ய வரும் பொது மக்களிடம் பத்திர எழுத்தர் மூலமாக லஞ்சமாக பணம் கேட்டு பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் நானும் திருப்பூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் C.தட்சிணாமூர்த்தி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் அவினாசி சார்பதிவாளர் அலுவகத்தை நேற்று 16.50 மணி முதல் 20.30 மணிவரை திடீர் தணிக்கை செய்தோம். திடீர் தணிக்கையின்போது தனிநபர் துரைசாமி மற்றும் சம்பத்குமார் ஆகியோரோடு அவினாசி தற்காலிக இணை சார்பதிவாளர் திரு.சங்கரமூர்த்தி அவர்கள் நின்று கொண்டிருந்தார். அப்போது துரைசாமியை விசாரிக்க தான் தன்னுடைய பூமியை விற்க இருப்பதாகவும் அதை கள ஆய்வு மேற்கொள்ள சார்பதிவாளர் சங்கரமூர்த்தி மற்றும் தன்னுடைய உறவினர் சம்பத்குமாருடன் புறப்பட இருப்பதாகவும் கூறினார். பின் துரைசாமி தானாகவே தன்னுடைய பேண்டின் இடது பக்க பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 12,500/-த்தை எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து துரைசாமியிடம் கேட்க முன்னுக்கு பின் முரணாக பதிலளித்தார். எனவே இந்த பணம் கள ஆய்வு மேற்கொள்ள தற்காலிக இணை சார்பதிவாளர்

கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு கொடுப்பதற்கான லஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்று சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தினுள் தகுந்த முகாந்திரம் சொல்லாத பணம் ரூ.500/- தனிநபர் லிங்கேஷ்குமார் என்பவரிடமிருந்தும், பணம் ரூ.1,390/- கணினி உள்ளீட்டாளர் விஜயலட்சுமி என்பவரிடமிருந்தும் கைப்பற்றப்பட்டது. பதிவறையில் இருந்த மரப்பெட்டியில் இருந்து பணம் ரூ.1,715/- கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் ரூ. 16,105/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.16,105/- ஆகியவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் XXXX S.இரத்தினம் 17.10.2020 மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு மேற்கண்டவாறு. Sir, received the complaint with enclosure on 17.10.2020 at 11.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.4/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of P.C (Amendment) Act 2018 ஒப்பம் xxxx C.தட்சிணாமூர்த்தி 17/10/2020 Dy.Supdt.of Police, V&AC, Tiruppur. நடவடிக்கைகள் பின்வருமாறு. முன்னிலை: 1. திரு.எஸ்.இரத்தினம், கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை. 2. திரு.சி.தட்சிணாமூர்த்தி, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். இன்று 16.10.2020-ம் தேதி மதியம் திருப்பூர் மாவட்டம் அவினாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தாங்கள் பதிவு செய்யும் பத்திரங்களுக்கு பத்திரம் பதிவு செய்ய வருபவர்களிடமிருந்து ஆவண எழுத்தர் மூலமாக கையூட்டு பெறுவதாக கிடைக்கப் பெற்ற நம்பகமான தகவலை பெற்று கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.எஸ். இரத்தினம் ஆகிய நான் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சி.தட்சிணாமூர்த்தி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் அவினாசி சார்பதிவாளர் அலுவலகத்தை இன்று மாலை சுமார் 16.50 மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கை சகிதம் இன்று 16.50 மணிக்கு அவினாசி சார்பதிவாளர் அலுவலகத்தினுள் நுழைந்த போது நுழைவாயிலில்

அவினாசி தற்காலிக இணை சார்பதிவாளர் திரு.பா.சங்கரமூர்த்தி அவர்கள் பின்னால் பெயர் கேட்டு தெரிந்த திரு.எஸ்.துரைசாமி மற்றும் திரு.கே.சம்பத்குமார் என்பவருடன் நின்று கொண்டிருந்தார். சார்பதிவாளரை விசாரிக்க அவர் துரைசாமி மற்றும் சம்பத்குமார் ஆகியோர்களுக்கு சொந்தமான இடத்தை பார்வையிட புறப்பட்டு கொண்டிருப்பதாகச் சொன்னார். இவர்களை சார்பதிவாளர் இருக்கைக்கு அருகே அழைத்து சார்பதிவாளரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய டேபிளில் வலது பக்க டிராயரில் இருந்து பர்சில் இருந்து பணம் ரூ.2030/- எடுத்து ஆஜர் செய்தார். அது பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய தாயார் ஐந்து வருடங்களுக்கு முன்பு இந்த பணத்தை கொடுத்ததாகவும் அதை அவர் ஞாபகமாக வைத்திருப்பதாகவும் அதை காலையில் வரும்போதே தினசரி பணப்பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். பதிவேட்டை பார்க்க இந்த பணம் ரூ.2030/- குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே அந்த பணம் ரூ.2030/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக எஸ்.துரைசாமியை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.12500/- எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக பதலளித்தார். எனவே அந்த பணம் சார்பதிவாளருக்கு கொடுப்பதற்கான லஞ்சப்பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக கே.சம்பத்குமாரை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய சட்டையின் இடது பக்க மேல்பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.360/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்று சொன்னதால் அப்பணம் சம்பத்குமாரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இவர்களை விசாரிக்க தாங்கள் தங்களுடைய இடத்தை விற்க இருப்பதாகவும் சார்பதிவாளர் அவ்விடத்தை பார்வையிட வேண்டும் என்று சொன்னதாகவும் அதனடிப்படையில் தாங்கள் காண்பிக்க செல்ல இருந்ததாகவும் கூறினர். அடுத்ததாக சார்பதிவாளர் அறையில் தனிநபர்கள் சிலர் தங்களுடைய பத்திரத்தை வாங்க வந்ததாக இருந்தனர். அவர்களை விசாரித்து அனுப்பி வைக்கப்பட்டது. அடுத்ததாக சார்பதிவாளர் அறையின் கிழக்கே வடக்கு பார்த்த பதிவு வைப்பறை அறைக்குள் செல்ல அலுவலக உதவியாளர் ஆர்.சி.சிவகுமார் வடக்கு பார்த்து சேரில் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை அவர் தானாகவே தன்னுடைய சட்டையின்

இடத்து பக்க மேல் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.175/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்று சொன்னதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இந்த பதிவு வைப்பறை அறைக்கு பின்னால் நின்று கொண்டிருந்த தனி நபர் எஸ்.லிங்கேஸ்குமார் என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.500/- எடுத்துஆஜர் செய்தார். அது பற்றி கேட்க முன்னுக்கு பின் முரணாக பதிலளித்தார். எனவே இந்த பணம் ரூ.500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இவரை விசாரிக்க தான் இவ்வலுவலகத்தில் வேலை பார்ப்பதாகவும் அதற்கு சார்பதிவாளர் பா.சங்கரமூர்த்தி வாரம் ரூ.2,300/- பணம் வழங்குவதாகவும் தான் ஜெராக்ஸ் எடுப்பது, சீல் வைப்பது போன்ற பணிகளை செய்து வருவதாகவும் சொன்னார். இதுசமயம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவினாசி சட்ட ஒழுங்கு காவல நிலைய பெண் தலைமை காவலர்கள் எம்.கோவிந்தம்மாள் WHC 961 மற்றும் எம்.ருக்மணி WHC 1612 ஆகியோர்கள் உதவிக்காக ஆஜர் ஆனார்கள். அடுத்ததாக கணினி அறைக்கு செல்ல அங்கு திருமதி.கே.காந்திமதி என்பவர் இடது பக்கமுள்ள கணினியில் எதிரே உள்ள இருக்கையில் அமர்ந்திருந்தார். அவர்களை அவினாசி சட்ட ஒழுங்கு காவல் நிலைய பெண் தலைமை காவலர்கள் எம்.கோவிந்தமாள் WHC 961 மற்றும் எம்.ருக்மணி WHC 1612 ஆகியோர்கள் தனியாக தணிக்கை செய்ய அவர்கள் தானாகவே தன்னுடைய பர்சில் இருந்து பணம் ரூ.125/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்ததாக கூறினர். அது அவருடைய சொந்தப்பணம் என்று சொன்னதால் அதை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக கணினி அறையில் வலது பக்கமாக இளநிலை உதவியாளர் எம்.ரோகிணி அமர்ந்திருந்தார். அவரை மேற்படி பெண் தலைமை காவலர்கள் தணிக்கை செய்ததில் பணம் ரூ.380/-ஐ தன்னுடைய பர்சில் இருந்து ஆஜர் செய்ததாக தெரிவித்தனர். இது அவருடைய சொந்த பணம் என்று சொன்னதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக கணினி அறைக்கு எதிரே உள்ள அறையில் மேற்கு பார்த்த இருக்கையில் உதவியாளர் திரு.ஆர்.கலியபெருமாள் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவருடைய பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் பணம் ரூ.90/- இருந்தது. அது அவருடைய சொந்த பணம் என்று சொன்னதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அங்கு நின்று கொண்டிருந்த இளநிலை உதவியாளர்

வெ.சிவக்குமார் என்பவரை தணிக்கை செய்ய பணம் ரூ.260/- இருந்ததை தானாகவே எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்று சொன்னதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இந்த அறையின் வடக்கு பக்கம் அமர்ந்திருந்த சி.ராமசாமி என்பவர் விசாரிக்க அவர் தனிநபர் என்றும் இவ்வலுவலகத்தில் அரசு வழிகாட்டி மதிப்பை தணிக்கை செய்து கொடுத்து வருவதாகவும், தனக்கு மாதம் ரூ.5000/- சார்பதிவாளர் கொடுப்பதாகவும் தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய அவரின் சட்டையின் மேல் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.500/- எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்று சொன்னதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக சார்பதிவாளர் அறையில் நின்று கொண்டிருந்த வி.விஜயலட்சுமி என்பவரை பெண் தலைமை காவலர்கள் தனியாக தணிக்கை செய்ய தன்னுடைய கைப்பையில் இருந்து பணம் ரூ.1390/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்ததாக சொன்னார்கள். அது பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம் சொல்லவில்லை. எனவே அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் அறைக்கு தெற்கே உள்ள பதிவறைக்கு செல்ல அங்கு கே.மகாதேவன் என்பவர் அமர்ந்திருந்தார். அவருடைய இருக்கைக்கு பின்புறம் இருந்த மரப்பெட்டியில் பணம் ரூ.1715/- இருந்தது. அது குறித்து கேட்க அந்த பணம் குறித்து தனக்கு தெரியவில்லை என்று கூறினார். எனவே அந்தப்பணமும் கைப்பற்றப்பட்டது. அவரை விசாரிக்க அவர் ஏற்கனவே இளநிலை உதவியாளராக இருந்து ஓய்வு பெற்றதாகவும் தற்போது ஆவணங்கள் அடுக்கி கொடுப்பதற்காக வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அடுத்ததாக இந்த சார்பதிவாளர் அலுவலகத்தின் தென்மேற்கே உள்ள சாப்பிடும் அறையில் உதவியாளர் திரு.கலியபெருமாளை அழைத்து சென்று தணிக்கை செய்ய அங்கு குறிப்பிடும்படியாக ஏதுமில்லை. இந்த திடீர் தணிக்கையின் போது தகுந்த முகாந்திரம் சொல்லாத பணம் ரூ.16,105/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது அனைத்து அலுவலர்களும் கண்ணியமாக நடத்தப்பட்டனர். பெண் அலுவலர்கள் அவினாசி சட்ட ஒழுங்கு காவல் நிலைய பெண் தலைமை காவலர்கள் எம்.கோவிந்தமாள் WHC 961 மற்றும் எம்.ருக்மணி WHC 1612 ஆகியோரால் தனியாக தனி அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தணிக்கை செய்யப்பட்டனர். இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை இன்று

16.10.2020-ம் தேதி 16.50 மணிக்கு தொடங்கி 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம் XXXX திரு.S.இரத்தினம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். திரு.C.தட்சிணாமூர்த்தி, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர், திரு.பா.சங்கரமூர்த்தி, தற்காலிக சார்பதிவாளர், அவிநாசி, திருப்பூர் மாவட்டம், திரு.S.துரைசாமி, 1/86A, பச்சாம்பாளையம், பெரியாயிபாளையம் (PO), அவிநாசி (TK), திருமதி. மா. கோவிந்தம்மாள், த.கா.961, அவினாசி காவல் நிலையம், திருப்பூர் மாவட்டம், திருமதி..ம.ருக்மணி, த.கா.1612, அவினாசி காவல் நிலையம், திருப்பூர் மாவட்டம், திருமதி.வி.விஜயலட்சுமி, DEO, சார்பதிவகம், அவிநாசி, திரு.S.லிங்கேஸ்குமார், அவிநாசி சார்பதிவாளர் அலுவலகம் நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.16,105/-ஐயும் இன்று 17.10.2020-ம் தேதி 11.30 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.4/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 கீழ் இன்று 12.00 மணிமுதல் 13.00 மணி வரை வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், செயல் முறை நடவடிக்கை, மற்றும் பணம் ரூ.16,105/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

Dakshinamurthy

17/10/2020

DY. Supdt of Police,

V&AC, Tiruppur.